பக்கங்கள் 27

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 18 ஞாயிற்றுக்கிழமை 01.02.2026 | அதிர்வு 185

## 8 பொலிஸ் அதிகாரிகள் அதிரடியாக இடமாற்றம்

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன், உடன் அமலுக்கு வரும் வகையில் 8 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

03




### தமிழின இருப்பை அழிக்கும் அரசுக்கு எதிராக

# பெப். 4 கரிநாள் போராட்டத்தில் சகல மக்களும் திரள வேண்டும்!

### தையிட்டிப் போராட்டக் களத்தில் வைத்து

### கஜேந்திரகுமார் எம்.பி. பகிரங்க அழைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கையின் சுதந்திர தினத்தைக் கரிநாளாகப் பிரகடனப்படுத்தி, எதிர்வரும் 4ஆம் திகதி வடக்கு, கிழக்கில் நடைபெறவுள்ள மாபெரும் கரிநாள் போராட்டங்களில் மக்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ். தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான

02

# புதிய கணக்காய்வாளர் நாயகம்: நாளைமறுதினம் இறுதி முடிவு!

புதிய கணக்காய்வாளர் நாயகம் தொடர்பில் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை தீர்மானம் எடுக்கப்படும் என்று சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.




நாளைமறுதினம் அரசமைப்புப் பேரவை கூடவுள்ளது என்றும் அவர் கூறினார்.

புதிய கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு ஜனாதிபதியால் நான்கு தடவைகள் அனுப்பப்பட்ட பெயர்களை அரசமைப்புப் பேரவை நிராகரித்திருந்தது.

இந்நிலையில் புதிய பெயரை ஜனாதிபதி முன்மொழிந்துள்ளார்.

02




இருப்பதை இல்லாததாகவும், இல்லாததை இருப்பதாகவும் காட்டுவதில் ஊடகவியலாளர்களாகிய நாங்கள் அசகாய சூரர்கள். ஓர் ஈர் கிடைத்தால் போதும். ஈரைப் பேனாக்கி, பேனைப் பெருமாளாக்கிக் காட்டிவிடுவோம். இல்லாதவற்றையும் சிருஷ்டித்து காட்டுவதால் ஒருவகையில் நாங்கள் எல்லோரும் கடவுளர்களுக்குச் சமமானவர்களும் கூட.

கடந்த வாரம் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் (மொட்டுக் கட்சியின்) தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ இந்தியாவில் ஒடிஸா மாநிலத்திற்குச் சென்றிருந்தார். அங்கு இந்தியக் குடியரசுத் தின நிகழ்வு ஒன்றில் பங்கு பற்றினார். அது பற்றி தென்னிலங்கை ஊடகங்கள் ஆரவாரமாகச் செய்தி வெளியிடுகின்றன.

'ஒடிசாவில் நடைபெற்ற

02

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்

குடியரசுத் தின நிகழ்வில் நாமல் ராஜபக்ஷவுக்கு சிறப்பு மரியாதை அளிக்கப்பட்டது. பிரம்மாண்டமான வரவேற்பு' என்ற தலைப்பில் செய்திகள் வெளியாகின. திறந்த ஜீப்பில் நாமல் ராஜபக்ஷ பயணித்து, குடியரசுத் தின அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொள்வது போன்ற படங்கள் வெளியாகின.

ஆய்வாளர்கள் இந்த வரவேற்பை தற்போதைய இலங்கை அரசாங்கத்திற்கான இந்தியாவின் ராஜதந்திரச் செய்தியாகக் கருதுகின்றனர் என்றும் புதிய வியாக்கியானம் கொழும்பு ஊடகங்களில் வெளியாகின.

அதனை மேற்கோள்காட்டி, 'இலங்கையை உலுக்கியுள்ள நாமலின் ஒடிஸா பயணம். இலங்கை அரசாங்கத்துக்கு ராஜதந்திர எச்சரிக்கையா?' என்று தலைப்பிட்டு தமிழ் ஊடகங்களும் தகவல்களைப் பரப்பின.

"இலங்கை அரசின் நகர்வுகள் குறித்து ஓரளவு அதிருப்தியில் மோடி அரசாங்கம் இருப்பதால்தான் ஒடிஸாவில் நடைபெற்ற குடியரசு தினத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷவுக்கு பிரமாண்டமான வரவேற்பை புதுடில்லி அளித்துள்ளதாக சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். நாமல் ராஜபக்ஷவுக்கான வரவேற்பை சமகால அரசாங்கம் ஓர் எச்சரிக்கை மணியாக எடுக்க வேண்டும் என்பதே நாமல் ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்ட பிரமாண்ட வரவேற்பின் இராஜதந்திர செய்தியாகும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். ஒடிஸாவில் நடைபெற்ற குடியரசு தின நிகழ்வில் நாமல் ராஜபக்சவுக்கு வழங்கப்பட்ட பிரமாண்ட வரவேற்பு குறித்து அரசாங்கம் பல்வேறு ஆலோசனைகளை நடத்தியுள்ளதாகவும் தெரியவருகிறது." – என்றெல்லாம் கூட தகவல்கள் வெளியிடப்பட்டிருந்தன.

என்ன, ஏது என்று விசாரித்துப் பார்த்தேன். கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் கூட இந்த செய்திகளை பார்த்து வியப்பில் ஆழ்ந்து போனதாக அறிந்தேன்.

இந்தியாவில் மத்தியில் ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் அரசுதான் ஒடிஸா மாநிலத்திலும் உள்ளது.

ஆனால் நாமல் ராஜபக்ஷவை குடியரசுத் தின நிகழ்வுக்கு அழைத்தது இந்திய மத்திய அரசோ, மாநில அரசோ அல்ல. ஒடிஸாவில் உள்ள பல டசின் கணக்கான தனியார் பல்கலைக்கழகங்களில் ஒன்றுதான் அழைத்துள்ளது. KIIT And KISS University என்ற அந்தத் தனியார் பல்கலைக்கழகத்தின் ஸ்தாபகத் தலைவர் கலாநிதி அச்சுதா சமந்தா. அவர் நாமல் ராஜபக்ஷவுக்கு நண்பர். அதனால் தமது பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற குடியரசு தின நிகழ்வுக்கு நாமல் ராஜபக்ஷவை அவர் பிரதம விருந்தினராக அழைத்திருந்தார். பல்கலைக்கழக மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை அந்த நிகழ்வின் போது நாமல் ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டார்.

இந்தச் செய்தியை அல்லது தகவலை வைத்துக் கொண்டு இந்தியாவின் குடியரசு தின நிகழ்வில் நாமல் ராஜபக்ஷ பங்குபற்றினார், அவருக்குப் பெரு வரவேற்பு அளிக்கப்பட்டது என்று ஈரைப் பேனாக்கி பெருமாளாக்கிவிட்டனர் நம்மவர்கள்.

இந்த விடயத்தைப் பற்றி எழுதுகின்ற போது ஏறத்தாழ 43 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற சில சம்பவங்கள் பற்றிய நினைவு எனக்கு வருகின்றது.

எந்தக் குறிப்பு இல்லாமல் என் நினைவில் இருப்பவற்றை மட்டும் தருகிறேன்.

இது, 1983 ஜூலைக் கலவரம் முடிந்த கையோடு இடம்பெற்ற விடயம். அந்தச் சமயத்தில் தமிழர்களின் ஏகோபித்த அரசியல் கட்டமைப்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி விளங்கியது. அதன் செயலாளர் நாயகம் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம். அப்போது அவர் இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவரும் கூட. கலவரத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளை அடுத்து, பாதுகாப்புக்காக அவர் இந்தியாவில் தஞ்சம் புகுந்திருந்தார்.

தமிழர் விவகாரத்தில் கொழும்புக்கு ஒரு பாடம் புகட்ட – ஒரு செய்தி சொல்ல – இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி விரும்பினார்.

1983 ஒகஸ்ட் 15 ஆம் திகதி புதுடில்லியில் செங்கோட்டையில் நடைபெற்ற இந்திய சுதந்திர தின பிரதான நிகழ்வில் இந்திய நாட்டின் கௌரவ விருந்தினராக அமிர்தலிங்கத்தை பிரதமர் இந்திரா காந்தி அழைத்து இருந்தார்.

அந்த நிகழ்வுக்கு பல்வேறு நாட்டு இராஜதந்திரிகளுடன் இலங்கையின் தூதுவர் கூட வந்திருந்தார்.

அந்த நிகழ்வில் பங்குபற்றுவதற்காக அமிர்தலிங்கம் காரில் வந்திறங்கிய போது நிகழ்வு அரங்கின் வாசலில் நின்று கௌரவ விருந்தினரான அமிர்தலிங்கத்தை இந்திய பிரதமர் இந்திரா காந்தி வரவேற்று அழைத்துச் சென்றார். அந்தச் சமயம் வரிசையில் நின்றிருந்த இலங்கைத் தூதுவரை அவர் பொருட்படுத்தவே இல்லை என்றும் கூறப்படுகின்றது.

அது மாத்திரமல்ல, அமிர்தலிங்கத்தை ஏனைய அரசியல் தலைவர்களுக்கு அறிமுகப்படுத்திய பிரதமர் இந்திரா காந்தி, "உருவாகி வரும் புதிய தேசத்தின் தலைவர்" ("Leader of a emerging nation") என்று சிலாகித்துக் குறிப்பிட்டார் எனவும், பிரதான நிகழ்வில் தமக்குப் பக்கத்தில் அமர வைத்து உயரிய கௌரவம் அளித்தார் எனவும் அப்போதே அறிந்திருந்தேன். அது பற்றிய மேல் விவரங்களை பிறிதொரு சமயத்தில் விளக்கமாகத் தரலாம் என்று நினைக்கிறேன்.

---

## பெப். 4 கரிநாள்...

போராட்டத்தில் நேற்று கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில்அவர்மேலும்தெரிவித்ததாவது:-

"இலங்கையின் சுதந்திர தினத்தைக் கரிநாளாகப் பிரகடனப்படுத்தி, எதிர்வரும் 4ஆம் திகதி வடக்கு, கிழக்கில் மாபெரும் கரிநாள் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பல்கலைக்கழக மாணவர்களும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளும் இணைந்து முன்னெடுக்கும் இந்தப் போராட்டங்கள் தொடர்பாக மாணவர்கள் எம்மைச் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

வடக்கில் கிளிநொச்சியிலும், கிழக்கில் மட்டக்களப்பிலும் நடைபெறவுள்ள இந்தப் போராட்டங்களுக்கு முழுமையான ஆதரவை நாம் வழங்குவதாகத் தெரிவித்துள்ளோம்.

மேலும், மட்டக்களப்பிலும் கிளிநொச்சியிலும் மட்டுமல்லாது, தமிழர் தாயகம் எங்கும் அன்றைய நாளை கரிநாளாக அனுஷ்டிக்க வேண்டும் என்றும் கேட்டிருந்தோம்.

எனவே, மக்கள் அனைவரும் மட்டக்களப்பு மற்றும் கிளிநொச்சிக்கு அணிதிரண்டு சென்று கரிநாள் போராட்டங்களில் கலந்துகொள்ள வேண்டும் என அழைப்பு விடுக்கின்றோம்.

தமிழின இருப்பை அழிக்கும் ஒற்றையாட்சி முறைமையை அடியோடு நிராகரித்து, தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டித் தீர்வை எட்டும் வரையில் கரிநாள் என்ற செய்தியை நிரூபிக்கும் வகையில் அனைவரும் ஒத்துழைப்பை வழங்கி ஒன்றுதிரள வேண்டியது அவசியமாகும்.

இந்த அரசு தமிழ் மக்களுக்கு நல்லதைச் செய்வதாகக் கூறிக்கொண்டாலும், தொடர்ச்சியாக இனவாத ரீதியில் தமிழ் மக்களுக்கு எதிராகவே செயற்பட்டு வருகின்றது. குறிப்பாக, தமிழ் மக்கள் தொடர்பில் கடந்த கால அரசுகள் எவ்வாறு செயற்பட்டனவோ, அதேபோன்று இன்றைய அரசும் செயற்பட்டு வருகின்றது."

– என்றார்.

---

## புதிய கணக்காய்வாளர்...

கணக்காய்வாளர் நாயகமாகப் பதவி வகித்த டிபிள்யூ.பி.சி. விக்கிரமரத்ன 2025 ஏப்ரல் மாதம் ஓய்வு பெற்றார். அன்று முதல் இதுவரையில் புதிய கணக்காய்வாளர் நாயகம் தெரிவு செய்யப்படவில்லை.

பதில் கணக்காய்வாளர் நாயகமாகச் செயற்பட்டவரின் பதவிக் காலமும் முடிவடைந்துள்ளது.

இந்நிலையில் கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு தகுதியான ஒருவரை பிரேரிக்குமாறு மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி இருந்தனர்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அரசமைப்புப் பேரவை நாளைமறுதினம் கூடுகின்றது.



# தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் நேற்று மீண்டும் ஆரம்பம்

(எஸ்.நிதர்ஷன்)

சட்டவிரோத தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் மீண்டும் ஆரம்பமானது.

நேற்று மாலை 4 மணிக்கு ஆரம்பமான இந்தப் போராட்டம் மாலை 6 மணிக்கு நிறைவடைந்தது. மீண்டும் இன்று காலை 6 மணிக்குப் போராட்டம் ஆரம்பமாகவுள்ளது.

நேற்றைய போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணி நடராஜர் காண்டீபன், சட்டத்தரணி க.சுகாஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### 8 பொலிஸ் அதிகாரிகள்...

இதில் இரண்டு பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், ஐந்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் ஒரு பொலிஸ் அத்தியட்சகர் உள்ளடங்குகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஈ.எம். ஜி.ஜே. சேரம் காலிப் பிரிவிலிருந்து, ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சிப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் எச்.சி.ஏ. புஷ்பகுமார காலிப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரி.எச்.ஈ.எல். பெரேரா கம்பளைப் பிரிவிலிருந்து கொழும்பு வடக்கு பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.என். குணவர்தன மொனராகலைப் பிரிவிலிருந்து பொலிஸ் தலைமையகத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.ஏ.ஆர். புஷ்பகுமார கொழும்பு வடக்கு பிரிவிலிருந்து விசேட விமான நிலையப் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.ஏ. உதய குமார வலான ஊழல் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் பதவியிலிருந்து களுத்துறைப் பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரியாக மாற்றப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.எம்.எஸ்.பி. விக்கிரமசிங்க பொலிஸ் தலைமையகத்தின் மேலதிக தலைமையக நிர்வாகப் பணிப்பாளராக இருந்து, மொனராகலைப் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கண்டி பொலிஸ் அத்தியட்சகராகக் கடமையாற்றிய பி.டி. இலங்ககோன் கம்பளைப் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப் பட்டுள்ளார் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.




# அமைச்சின் பெயரில் போலி ஆவணங்கள் இராஜகிரியவில் வேலைவாய்ப்பு மோசடி

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாகக் கூறி, அரச உத்தியோக பூர்வ ஆவணங்களைப் போலியாகப் பயன்படுத்தி பண மோசடியில் ஈடுபட்ட 38 வயதுடைய நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவின் கீழ் இயங்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட விசாரணைப் பிரிவினரால், கடந்த ஜனவரி 26 ஆம் திகதி இராஜகிரிய, மொரகஸ்முல்ல பகுதியிலுள்ள விடுதி ஒன்றில் வைத்து இந்தச் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சின் உத்தியோகபூர்வ கடிதத் தலைப்புகளை போலியாகத் தயாரித்து, வேலை தேடுபவர்களிடம் பணம் பெற்றதாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளையடுத்தே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட வேளையில் அவரிடமிருந்து போலியான கடிதத் தலைப்புகள், சுயவிபரக் கோவைகள், வெளிநாட்டு கடவுச்சீட்டுகளின் நிழற்படப் பிரதிகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு விண்ணப்பப் படிவங்கள் பலவற்றை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

பிலிமத்தலாவை பிரதேசத்தைச் சேர்ந்த இந்தச் சந்தேகநபர், ஜனவரி 27ஆம் திகதி அழுத்கடை இலக்கம் 05 நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது தலா 10 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் செல்ல அனுமதித்துள்ளதுடன், அவருக்கு வெளிநாட்டுப் பயணத்தடையும் விதிக்கப்பட்டுள்ளது.




# 14 வயது சிறுமி கொலை!

## தந்தை கைது

உரகஸ்மன்ஹந்திய பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 14 வயது சிறுமி ஒருவர் கூர்மையான ஆயுதத்தால் தாக்கப்பட்டுப் படுகாயமடைந்து எல்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த சிறுமிக்கும் அவரது தந்தைக்கும் இடையில் தொலைபேசி மூலம் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது என்று முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபரான தந்தை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த சிறுமியின் சடலம் எல்பிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை உரகஸ்மன்ஹந்திய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஆபத்தில் போக்குவரத்து

கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் உள்ள பல குறுகிய தூர வழித்தடங்களில் பயணிகள் போக்குவரத்து சேவைகளில் ஈடுபடும் பஸ் சாரதிகளில் சுமார் அறுபது சதவீதமானோர் கடுமையான போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளவர்கள் என்ற அதிர்ச்சித் தகவலை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க வெளியிட்டிருக்கின்றார்.

இருப்பினும், இது தொடர்பாக அரசாங்கம் முழுமையான ஆய்வை மேற்கொள்ளவில்லை என்றும், இந்தத் தரவு பஸ் சங்கங்களால் வழங்கப்பட்டது என்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்று முன்தினம் கண்டி மாவட்ட போக்குவரத்து ஒருங்கிணைப்புக் குழு நிறுவப்பட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றார்.

கடந்த ஆண்டு சுமார் 2,700 பேர் சாலை விபத்துகளில் உயிரிழந்தனர். இவர்களில் சுமார் 2,000 பேர் பாதசாரிகள், மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் அல்லது மோட்டார் சைக்கிள்களின் பின் இருக்கையில் அமர்ந்திருந்தவர்கள் என்றார் அமைச்சர்.

இந்தத் தரவுகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம், இன்று நவீன வாகனங்களில் பயணிப்பவர்கள் ஓரளவுக்கு பாதுகாப்பாக இருக்கின்றார்கள் என்பதை நாம் உறுதிப்படுத்த முடியும். ஏனெனில் அந்த வாகனங்கள் பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்தித் தயாரிக்கப்பட்டுள்ளன.

மேற்படி இறப்புகளில், 53 சதவீதம் ஆண்கள். சாலை விபத்துகளால் ஏற்படும் இந்த மரணங்கள் குடும்பப் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. சாலைக் குறைபாடுகள், வாகனக் குறைபாடுகள், சாலையில் பயணிப்பவர்களின் தவறுகள் மற்றும் சாரதிகளின் தவறுகள் அனைத்தும் இந்த விபத்துகளுக்குக் காரணமாக அமைந்தன.

இது தொடர்பாக நடத்தப்பட்ட ஓர் ஆய்வில், இந்த இறப்புகளில் 50 சதவீதத்திற்கும் அதிகமானவை சாரதிகளின் தவறுகளால் ஏற்பட்டவை என்பது கண்டறியப்பட்டுள்ளது. சாலை மற்றும் வாகனம் எவ்வளவு நன்றாக இருந்தாலும், சாரதி போதைப்பொருள் பயன்படுத்தினால், பயணிகளின் பாதுகாப்பு ஆபத்தில் சிக்குவது தவிர்க்க முடியாததாகும்.

“இன்று நிகழும் சாலை விபத்துகளின் எண்ணிக்கையில் சாரதிகள் மது மற்றும் போதைப்பொருள் பயன்படுத்துவது மிகப்பெரிய காரணியாகும். பாஸ்டியன் மாவத்தை பஸ் நிலையத்தில் நடந்த நடமாடும் போதைப்பொருள் பரிசோதனைத் திட்டத்தின் போது எழுந்தமானமான முறையில் பரிசோதிக்கப்பட்ட 56 சாரதிகளில் 10 பேர் போதைப்பொருள் பயன்படுத்திமை கண்டறியப்பட்டது. அதாவது மொத்தத்தில் சுமார் 16 சதவீதம். போதைப்பொருள் பயன்படுத்தும் சாரதிகளின் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.” - என்றார் அமைச்சர்.

“இதுவே தற்போதைய நிலைமை. சாரதிகள் அடாவடித்தனமாகச் செயற்பட இடமளிக்கப் போவதில்லை. தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுப்போம். இனிவரும் காலங்களில் கனரக சாரதி அனுமதிப்பத்திரம் இருந்தாலும், பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார்கள். அதற்கு முறையான பயிற்சியின் பின்னர் விசேட அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். அத்தகையவர்கள் மாத்திரமே மீண்டும் பயணிகள் போக்குவரத்துச் சேவைகளில் ஈடுபட முடியும்.” - எனவும் அவர் கூறியுள்ளார்.

ஏற்கனவே நாடு - குறிப்பாக நமது இளம் சமூகம் - போதைப் பொருள் பாவனை என்ற கொடூரத்துக்குள் சிக்கி இருக்கும் பின்புலத்தில், அந்த பாவனையினால் போக்குவரத்து துறை - விசேடமாக பொதுப் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பிரிவு - பெரும் ஆபத்துக்குள் சிக்கியுள்ளது என்றே தோன்றுகின்றது. போக்குவரத்து அமைச்சர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

# புதிய அலை கலை வட்டத்தினரின் கலாமித்ரா விருது வழங்கல் நிகழ்வு

## 45 ஆவது ஆண்டு நிறைவு விழாவுடன் கொழும்பில்















(அஷ்ரப் ஏ சமத்)

46 வது ஆண்டில் கால்பதிக்கும் புதிய அலை கலை வட்டத்தின் கலா மித்ரா விருது விழா நேற்றுமுன்தினம் கொழும்பு 11 செட்டியார் தெரு கல்யாண முருகன் மண்டபத்தில் அதன் ஸ்தாபகர் சிரேஷ்ட ஊடகவியலாளர் கலைஞர் ராதா மேத்தா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இவ்வட்டத்தின் பயிற்சி பெற்ற மாணவ, மாணவிகளின் கலை, இலக்கிய நிகழ்வுகள் மேடையேற்றப் பட்டன. அத்துடன் வட்டத்தினால் நடத் தப்பட்ட போட்டி நிகழ்ச்சிகளின் வெற்றி யாளர்களுக்கு விருதும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.கலை, இலக்கி யத்தின் பத்து துறைகளில் பிரசித்தமான படைப்பாளிகளுக்கு கலா மித்ரா விருதுகள் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட் டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஹாசிம் உமர் பவுண்டேஷன் ஸ்தாபகர் புரவலர் ஹாசீம் உமர், திருமதி மரியம் ஹாசீம் உமர் ஆகியோர் பங்கு பற்றினர். இந்தியாவிலிருந்து வருகை தந்த கலா நிதி பி.ஆறுமுகபாண்டியன் (தலைவர், பாலபாகு குரூப், சென்னை) மற்றும் பி.கே. சரவணன் (இயக்குநர், திருநெல்வேலி மெடிக்கல் ஹாஸ்பிட்டல்) ஆகியோர் கௌரவ அதிதிகளாகப் பங்குபற்றிச் சிறப்பித்தனர். மற்றும் பல்வேறு துறை சார்ந்த அதிதிகளும் கலந்து கொண்ட னர்.

தொடர்ச்சி▼

# புதிய அலை கலை வட்டத்தினரின் கலாமித்ரா விருது வழங்கல் நிகழ்வு

தொடர்ச்சி▲

கலை வட்டத்தின் குறுந்திரைப்படம், பரதநாட்டியம், நடனம், கலை நிகழ்ச்சிகளும் மேடையேற்றப்பட்டன. கலை வட்டத்தின் வருடாந்த இதழ் வெளியிட்டு வைக்கப்பட்டது

கடந்த 45 ஆண்டுகளாக புதிய அலை கலை வட்டம் என்ற ஓர் அமைப்பைத் தாம் நிறுவி இதனுடாக கலை, இலக்கிய பணியாற்றி வருகின்றார் என நிறுவுநர் ராதா மேத்தா தெரிவித்தார்.

“இந்தக் கலைஞர்களுக்குக் கைகொடுக்க இந்த நாட்டில் யாரும் இல்லை. கடந்த 45 வருடங்களாக இந்தக் கொழும்பில் ஒரு நாட்டியம் அல்லது நாடகத்தை ஒத்திகை பார்ப்பதற்கு எங்களுக்கு 10 அடியில் ஓர் அறையாவது இல்லை. இவ்வாறான நிலையில்தான் இக்கலை வட்டத்தை முன்னெடுத்து வருகிறோம். இருந்தும் புரவலர் ஹாசிம் உமர் அவர்கள் அடிக்கடி இவ்வாறான நிகழ்வுக்கு கைகொடுத்து வருபவர். அண்மையில் எமது மகளிர் அணியினருக்கு அழைத்து உதவினார்” என்றார் ராதா மேத்தா.

அங்கு வருகை தந்த சென்னை பாலபாகு குரூப் தலைவர் கலாநிதி ஆறுமுகபாண்டியன்

அங்கு உரையாற்றும் போது “எனது சகோதரர் கலை, கலாசார அமைச்சராக உள்ளார். உங்களை இந்தியாவுக்கு நாங்கள் அழைக்கிறோம். அங்கு உங்கள் கலை நிகழ்ச்சிகளுக்குக் களம் அமைத்துத் தருகிறோம். அத்துடன் உங்கள் கலை வட்டத்திற்குக் கொழும்பில் ஓர் இடத்தை – கட்டடத்தை – அமைப்பதற்கு ஒரு திட்டத்தை வரைந்து கொடுங்கள். அதற்கு உங்களால் உதவி செய்ய முடியும்” என அங்கு உறுதியளித்தார்.






















# தமிழக மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கையர்கள் இங்கு பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிக்கரம்

டித்வா புயலைத் தொடர்ந்து இலங்கையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, தமிழ்நாட்டில் உள்ள மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கையர்கள் இரண்டு கொள்கலன் நிவாரணப் பொருள்களையும், நிதி உதவியையும் வழங்கியுள்ளனர்.

இலங்கை மக்களுடன் தங்களின் வலுவான ஒற்றுமையை வெளிப்படுத்தும் விதமாக, தமிழ்நாட்டில் உள்ள மறுவாழ்வு முகாம்களில் மீள்குடியேற்றப்பட்ட இலங்கையர்கள், டித்வா புயலைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு, இரண்டு 20 அடி கொள்கலன் அளவிற்கு அத்தியாவசிய நிவாரணப் பொருள்களையும், கணிசமான நிதி உதவியையும் நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

இந்த நிவாரண உதவிகள், மீள்குடியேற்றப்பட்ட இலங்கை சமூகத்தின் பிரதிநிதிகளால் சென்னையில் உள்ள இலங்கை துணைத் தூதரகத்தில் முறையாகக் கையளிக்கப்பட்டது.

இந்த நிவாரண பொருள்கள் யாவும் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட உள்ளன.

தொடர்ச்சி▼



**To: All well-wishers and members of the Sri Lankan community,**

**Sourcing materials and funds for rescue and rehabilitation operations in Sri Lanka following catastrophic floods and landslides**

In the aftermath of the devastating impact of the ***Ditwah Cyclone*** on Sri Lanka, the country is experiencing widespread calamities, including severe flooding and catastrophic landslides. These events have displaced thousands of individuals and caused extensive damage to lives, infrastructure, and livelihoods.

In this urgent context, the Government of Sri Lanka appeals to the Sri Lankan community and all well-wishers for financial contributions to support ongoing rescue, relief, and rehabilitation efforts.

Donations may be made to the following bank account:

Name of the Account : Sri Lanka Deputy High Commission
Name of the Bank : Bank of Ceylon
Branch : Chennai
Account No : 7580004693
Swift Code : BCEYIN5M

A formal acknowledgement of each financial contribution will be issued by the Deputy High Commission of Sri Lanka, Chennai.

In addition to monetary assistance, donations of the following essential rescue materials will be greatly appreciated;

| No. | Item | Quantity |
|---|---|---|
| 1. | Mega Phone | 250 |
| 2. | Rescue Rope | 100 |
| 3. | Re Chargeable Torch | 750 |
| 4. | Rescue Tube | 350 |
| 5. | Search Light | 585 |
| 6. | Safety Helmet | 750 |
| 7. | Helmet with lamp | 625 |
| 8. | Head mount torch | 1,250 |
| 9. | Spine Board | 125 |
| 10. | Submersible Water Pump | 750 |
| 11. | Mobile Water Pump | 50 |
| 12. | Boat with Engine capacity exceeding 40HP | 50 |
| 13. | Chain Saw | 207 |
| 14. | Flash Light | 405 |
| 15. | Generators | 250 |
| 16. | Harness | 65 |
| 17. | Life Jackets | 1,435 |
| 18. | Gum Boot | 7,500 |
| 19. | Mobile Toilets | 500 |
| 20. | Mini Excavators | 60 |

***For Agriculture Sector***

| No. | Item | Estimated cost in Million |
|---|---|---|
| 1. | Rehabilitation of affected paddy lands, vegetable and other crop cultivations | 15,250 |
| 2. | Rehabilitation of Minor Tanks | 4,800 |
| 3. | Rehabilitation of Anicuts | 900 |
| 4. | Rehabilitation of Canals | 1,800 |
| 5. | Rehabilitation of Minor Irrigation Systems | 8,340 |
| 6. | Fertilizer for 510,000 ha of recently cultivated paddy lands which have been washed off due to the recent floods. The following amount are required for re cultivation | |
| | Urea | 112,000MT |
| | TSP | 30,000MT |
| | MOP | 30,000MT |

Prospective donors may contact the Sri Lanka Deputy High Commission in Chennai through the following channels;

1. Name : Mrs. Harsha Ruparathne, Counsellor
   Phone : 7845930188
   Email : floodrelief.sldhc@gmail.com
2. Name : Mrs. Preetha Sridharan
   Phone : 9884492876
   Email : floodrelief.sldhc@gmail.com
3. Name : Mrs. Y. Vandana
   Phone : 9791192480
   Email : floodrelief.sldhc@gmail.com

Address : Sri Lanka Deputy High Commission
No. 56, Sterling Road, Nungambakkam
Chennai, Tamil Nadu

**Rescue material donations are requested on an urgent basis, preferably before 02nd December 2025.**

Your contribution at this critical hour of need is sincerely appreciated.

**Dr. Ganeshanathan Geathiswaran**
Deputy High Commissioner



# தமிழக மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கையர்கள் இங்கு பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிக்கரம்

தொடர்ச்சி▲

பொருள் உதவிகளுக்கு மேலதிகமாக, மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கையர்கள் தாங்களாக முன்வந்து, ஒருங்கிணைந்த முயற்சிகள் வாயிலாக இந்திய ரூபா 12,33,604 (பன்னிரண்டு லட்சத்து முப்பத்தி மூன்றாயிரத்து அறுநூற்று நான்கு) நிதிப் பங்களிப்பை வழங்கியுள்ளனர். இது இலங்கை ரூபாஏறத்தாழ நாற்பத்து இரண்டு லட்சத்து ஐம்பதாயிரத்துக்கு சமமானதாகும்.

நிவாரண பொருள்கள் கையளிக்கப்பட்டபோது, துணைத் தூதரகத்தில் பெருமளவிலான இலங்கை சமூகப் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில், தங்களின் நிவாரண உதவிகளை இலங்கைக்கு ஒருங்கிணைத்து அனுப்புவதற்கு எடுத்த முயற்சிகளுக்காக துணைத் தூதரகத்திற்கு அவர்கள் தங்கள் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்தனர்.

இந்தக் கடினமான காலகட்டத்தில் வெள்ளச் சூழ்நிலையைச் சமாளிக்கவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவளிக்கவும் இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள உடனடி நடவடிக்கைகளுக்கு அவர்கள் தங்கள் பாராட்டுகளைத் தெரிவித்தனர்.

இந்த உதவிகள், பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு முறையாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் சென்றடையும் என்பதில் இலங்கை அரசாங்கத்தின் மீது தங்களுக்கு நம்பிக்கை இருப்பதாகவும் பிரதிநிதிகள் மேலும் தெரிவித்தனர்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள 106 மறுவாழ்வு முகாம்களில் சுமார் 60,000 இலங்கையர்கள் வசிக்கின்றனர்.

மேலும் 40,000 மீள்குடியேற்றப்பட்ட இலங்கையர்கள் முகாம்களுக்கு வெளியே காவல்துறையில் பதிவு செய்துகொண்டு வாழ்கின்றனர்.

இடம் பெயர்வதால் ஏற்படும் சவால்கள் இருந்தபோதிலும், இந்தச் சமூகங்கள் இலங்கையில் பேரழிவால் பாதிக்கப்பட்டவர்களுக்காக கூட்டாக நிவாரண உதவிகளைத் திரட்டிய செயலானது, அனைவரின் மனதினை நெகிழச் செய்துள்ளது.







# முல்லைத்தீவு ஊடக அமையத்தினால் நேற்றுக் கறுப்பு ஜனவரி அனுஷ்டிப்பு

முல்லைத்தீவு ஊடக அமையத்தினால் கறுப்பு ஜனவரி தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக ஊடகவியலாளர்களுக்கான அஞ்சலி நிகழ்வும் கறுப்பு ஜனவரி தொடர்பான துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கும் நிகழ்வும் நேற்று இடம் பெற்றன.

ஊடகவியலாளர்கள் ஜனவரி மாதத்தை கறுப்பு ஜனவரியாக அனுஷ்டித்து வருகின்றார்கள்.

நீதிக்காக குரல்கொடுத்த சுமார் 50 ஊடகவியலாளர்கள் அரச படைகளால் கொல்லப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளார்கள். ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் பல இடம்பெற்றுள்ளன.

இவற்றில் பெரும்பாலானவை ஜனவரி மாதத்திலேயே இடம் பெற்றிருக்கின்றன அந்த வகையில் ஜனவரி மாதத்தை ஊடகவியலாளர்கள் கறுப்பு ஜனவரியாக அனுஷ்டித்து வருகின்றார்கள்.

இந்த மாதத்தில் உயிரிழந்த ஊடகவியலாளர்களை நினைவு கூறுகின்ற அதே வேளையிலே அவர்களுடைய கொலைகளுக்கு நீதி கோரி தொடர்ச்சியான போராட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றனர்.

யார் ஆட்சிக்கு வந்தாலும் இன்று வரை அவர்களுக்கான நீதி கிடைக்காத நிலைமையில் தொடர்ச்சியாக ஊடகவியலாளர்கள் நீதிக்காகக் குரல் எழுப்பி வருகின்றனர்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தின் தலைவர் சண்முகம் தவசீலன் தலைமையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில், முன்னதாக முல்லைத்தீவு ஊடக அமையத்திலே திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தின் உண்மையை வெளிப்படுத்தியதால் சுட்டு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் மற்றும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க, கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட ஆகியோருடைய நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் உருவப்படங்களுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, சுடர் ஏற்றப்பட்டு, மலர் தூவி அகவணக்கம் செலுத்தப்பட்டு, அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு ஊடகவியலாளர்கள் முல்லைத்தீவு நகரிலும் முல்லைத்தீவு பஸ் நிலையத்

தொடர்ச்சி▼












# முல்லைத்தீவு ஊடக அமையத்தினால் நேற்றுக் கறுப்பு ஜனவரி அனுஷ்டிப்பு

தொடர்ச்சி▲

திலும் கறுப்பு ஜனவரி தொடர்பான துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அந்தத் துண்டுப்பிரசுரத்தில் கூறப்பட்டிருந்தவை வருமாறு:–

தமிழ் ஊடகவியலாளர் சுப்ரமணியம் சுகிர்தராஜன் எம்மோடு இருந்திருந்தால் இன்று அவருக்கு 56 வயதாகியிருக்கும். ஆனால், வேதனையளிக்கும் விதத்தில் 20 ஆண்டுகளிற்கு முன்னர் தமது 36 ஆவது அகவையில் அரச கொலையாளிகளால் அவர் படுகொலை செய்யப்பட்டார்.

கிழக்கு கடற்கரை நகரான திருகோணமலையில், 2006 ஆம் ஆண்டின் இரண்டாவது நாள். ஐந்து மாணவர்கள் எப்படி படுகொலை செய்யப்பட்டனர் என்பதை மறுக்க முடியாத புகைப்பட ஆதாரத்துடன் அவர் நிரூபித்தமையால் அவர் அரச படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அந்த மாணவர்கள் எடுத்துச் சென்ற குண்டு வெடித்ததாலேயே அவர்கள் உயிரிழந்தனர் என்று இலங்கை அரசு கூச்சமின்றி பச்சைப் பொய் கூறியது (அல்லது உண்மையை மூடி மறைக்கும் வகையில் பச்சைப் பொய் கூறியது). ஆனால், சுகிர்தராஜன் உண்மையை உலகிற்கு வெளிப்படுத்தினார். இதனாலேயே அவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இதற்கு நான்கு ஆண்டுகளுக்கு பிறகு 2010 தலைநகரில் அதே ஜனவரி மாதத்தில் கடத்தப்பட்ட பிரகீத் எக்னலிகொட உட்பட பலரும் இதே போன்ற துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளானார்கள்.

சுகிர்தராஜனிற்கு முன்னரும் பிறகும் இவ்வாறு உண்மைகளை வெளிக்கொண்டு வந்ததமையால் வலிந்து காணமால் ஆக்கப்பட்ட அல்லது கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் எண்ணிக்கைகளைக் கூட்டினால் அது 50 ஐ எட்டும். அதில் பெரும்பாலானவர்கள் தமிழர்கள். அதிலும் அதிகளவானாவர்கள் ஜனவரி மாதம் பலியாயினர்.

இதனைவிட ஊடக நிறுவனங்கள் மீதும் தாக்குதல்கள் பலவும் இடம்பெற்றன. இவையும் அதிகளவில் இதே ஜனவரி மாதத்தில்தான் இடம்பெற்றன.

இதன் காரணமாக ஜனவரி மாதமே ஊடகவியலாளர்களுக்கு கறுப்பு மாதமாக உள்ளது.

குற்றமிழைத்தவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்படாதமௌ மட்டுமின்றி அவர்கள் சலுகைகளைப் பெற்றுக் கொள்ளுவது, மேலும் உண்மையைக் கண்டறிந்து நீதியை நிலை நாட்ட தொடர்ச்சியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்கள் எந்த நவடிக்கையும் எடுக்கத் தவறியதால் இன்று முழு நாடும் இருண்டு போயுள்ளது. – எனக் குறிப்பிடப்பட்டுள்ளது


















# வெடிப்பு விழுந்து கீழ் இறங்கத் தொடங்கும் கொடுக்குளாய் அபாய வெளியேற்றப் பாதை

(மரியசீலன் திலைக்ஸ்)

பல மில்லியன் ரூபா செலவில் போடப்படும் யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, கொடுக்குளாய்– இயக்கச்சி அபாய வெளியேற்றப் பாதை வெடிப்பு விழுந்து கீழ் இறங்குகின்றது.

கொடுக்குளாய் அபாயவெளியேற்ற பாதை ஆசிய வங்கியின் நிதி உதவியுடன் பல மில்லியன் கணக்கான நிதியில் கடந்த சில மாதங்களாகப் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது.

இந்த வீதிப் புனரமைப்பு பணிகள் முடிவு நிலையை எட்டிய நிலையில் புனரமைப்புசெய்யப்பட்டவீதியில்வெடிப்பு விழத் தொடங்கியுள்ளது.

சில இடங்களில் அதிகமாக வெடிப்பு விழுந்து, வீதி கீழ் இறங்கி உள்ளதை அவதானிக்க முடிகிறது.

வடமராட்சி கிழக்கு மக்களினுடைய முக்கிய அபாய வெளியேற்றப் பாதையாக காணப்படும் இந்த வீதியைப் புனரமைப்பு செய்து தருமாறு பல வருடங்களாக மக்கள் கோரிக்கை விடுத்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு இந்த வீதிப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆனாலும் வீதிப் பணிகள் முடிவுறும் தருவாயில் போடப்பட்ட வீதி மீண்டும் வெடிப்பு விழுந்து கீழ் இறங்கி உள்ளது.

# திருமலை கல்லடிச்சேனை கடற்கரையில் 117 ஆமை முட்டைகளுடன் ஒருவர் கைது

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

திருகோணமலை கல்லடிச்சேனை கடற்கரைப் பகுதியில் கடந்த புதன் கிழமை இலங்கைக் கடற்படை நடத்திய சிறப்புத் தேடுதல் நடவடிக்கையின் போது, நூற்று பதினேழு ஆமை முட்டைகளை சட்டவிரோதமாக வைத்திருந்த ஒரு நபரைக் கைது செய்தனர்.



கிழக்குக் கடற்படைக் கட்டளையின் இலங்கை கடற்படை கப்பல் லங்கா பட்டுன நிறுவனத்தினால் திருகோணமலை கல்லடிச்சேனை கடற்கரைப் பகுதியில் நடத்தப்பட்ட இந்தத் சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, கடற்கரையிலிருந்து சட்டவிரோதமாக கொண்டு செல்லப்பட்ட நூற்று பதினேழு ஆமை முட்டைகளுடன் ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் திருகோணமலை தோப்பூர் பகுதியைச் சேர்ந்த 57 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டார். அவர் ஆமை முட்டைகளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சேருநுவர வனவிலங்கு அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டார்.













# கிவுல் ஓயாத் திட்டத்தை முறியடிக்க சகல தமிழர்களும் ஒன்றிணைவோம்

## சாணக்கியன் எம்.பி. உரிமையுடன் அழைப்பு

கிவுல் ஓயா திட்டத்தை முழுமையாக முறியடிக்க தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். ஒற்றுமையே எமது பலம். நாளை நடைபெறும் எதிர்ப்புப் பேரணியில் நாங்கள் எமது முழு எதிர்ப்பை வெளிப்படுத்துவோம்.

– இப்படித் தமிழ் உறவுகளுக்கு உரிமையுடன் அழைப்பு விடுத்துள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன்.

சித்தாண்டி சமூக ஒன்றியம் ஏற்பாடு செய்த மாபெரும் பொங்கல் விழாவும் கௌரவிப்பு நிகழ்வும் சித்தாண்டி ஸ்ரீசித்திர வேலாயுத ஆலய முன்றிலில் நேற்று நடைபெற்றன. அதில் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த உரையாற்றிய போதே மேற்படி அழைப்பை அவர் விடுத்தார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தற்போது அரசாங்கம் கிவுல் ஓயாத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்கின்றது. வவுனியா மாவட்டத்தில் தமிழர்களுக்கு சொந்தமான கிட்டத்தட்ட 13 ஆயிரம் ஏக்கரிற்கும் அதிகமான நிலப்பரப்பை அழித்து, மணலாறு பிரதேசத்தில் குடியமர்த்தப்பட்ட 4,000 சிங்கள குடும்பங்களுக்கு நீர் வழங்க இத் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. இத் திட்டம் முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டபாய ராஜபக்ஷ காலத்தில் கொண்டு வர எத்தனிக்கப்பட்ட போது தடுத்து நிறுத்தப்பட்டது.

கடந்த ஆட்சிக் காலத்தில் சித்தாண்டியில் மயிலத்தமடு, மாதவனை பிரச்சினை காரணமாக பல தமிழ் பண்ணையாளர்கள் பாதிக்கப்பட்டனர். இதற்கான எதிர்ப்பை வெளிப்படுத்தி, சென்ற ஆண்டுகளில் தனி ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக நீதியை நிலை நாட்டும் நோக்கில் தொடர்ந்து இன்றளவிலும் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றேன். இப் பிரச்சினை முற்றுப்பெற்ற விடயமாகக் காணப்படினும் அது இன்று வரை முடியவில்லை. 15 ஆண்டுகளுக்கு பிறகு இப்போது மீண்டும் கிவுல் ஓயாப் பிரச்சினை எப்படி மீள உருவெடுக்கின்றதோ அதே போல மயிலத்தமடு, மாதவனை பிரச்சினையும் உருவெடுக்கும். மிகுந்த சிரமப்பட்டு நாங்கள் மயிலத்தமடு, மாதவனை பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வந்ததை சிலர் மறந்து விட்டனர். ஆனால் இந்த நிலம் சம்பந்தமான போராட்டங்களை நாம் முன்னெடுப்பது பண்ணையாளர்களுக்காகவோ, தனிப்பட்ட குழுவினருக்காகவோ அல்ல. மாறாக தமிழினத்துக்காகவே. எமது மக்களுக்காகவே.

கிவுல் ஓயாத் திட்டத்தை முழுமையாக முறியடிக்க தமிழ் மக்களாகிய நாம் ஒன்றிணைய வேண்டும். ஒற்றுமையே எமது பலம். – என்றார்.














# இலங்கைப் போக்குவரத்துச் சபையினரால் வவுனியா - கொழும்பு புதிய சொகுசு சேவை

(கி.வசந்தன்)

வவுனியாவில் இருந்து கொழும்பிற்கான புதிய சொகுசு பஸ் சேவை ஒன்று இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ் சேவை வவுனியா புதிய பஸ் நிலையத்தில் இருந்து தினமும் காலை 09.05 க்கு புறப்பட்டு புத்தளம் வழியாக கொழும்பைச் சென்றடையும்.

வவுனியாசாலைக்கு சொந்தமாக சொகுசு பேருந்துகள் இல்லாத நிலையில் அநுராதபுரம் சாலைக்குச் சொந்தமான பஸ்ஸின் மூலம் இச்சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



இந்தச் சேவையானது முதற்கட்டமாக ஒரு வழிப்பாதை கொண்டதாக அமைந்துள்ளதுடன் வரும் காலங்களில் அது விஸ்தரிக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை வவுனியாவில் இருந்து கொழும்பிற்கு ஒரு பயணிக்கு 1,460 ரூபா கட்டணமாக அறவிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆரம்ப நிகழ்வில் வவுனியா சாலையின் அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.

# அறுவடையாகும் ஈரநெல்லைப் பாதுகாக்க நெல் உலர்த்திகளை நிறுவுதல் வேண்டும்!

## இயற்கையின் நண்பர்கள் இயக்கம் கோரிக்கை

வடமாகாணத்தின் முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் உள்ளிட்ட மாவாட்டங்களில் அறுவடை செய்யும் நெல்லை சீரற்ற காலநிலையால் உலரவிடுவதில் விவசாயிகள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்குகிறார்கள்.

இதன் காரணமாக வடக்கு மாகாணத்தில் வேறுவழியின்றி அறுவடை செய்த ஈரநெல்லை வீதிகளில் உலரவிடும் நடவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு தார் வீதிகளில் காயப் போடப்படும் ஈரநெல்லில் இரசாயன பதார்த்தங்கள் கலந்து அந்த நெல்லின் மூலம் உருவாகும் அரிசிகள் நோய்க் காவிகளாக மாறும் அபாயம் உள்ளதாக சுகாதாரத் துறையினர் தொடர்ச்சியாக எச்சரிக்கை விடுத்து வருகின்றனர்.

அதேபோல் ஈர நெல்லை வீதிகளில் காயப் போடுவதனால் போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்பட்டு விபத்துகள் இடம்பெறும் ஆபத்து நிலையும் உருவாகியுள்ளது.

வடமாகாணத்தில் வன்னி பகுதிகளில் நீண்ட காலமாக பல்வேறு நெல்லுலர்த்திகள் மற்றும் அரிசி ஆலைகள்



என்பன இயங்காம்ச்ல் உள்ளன என விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றார்கள். நெல் உலர்திகள், அதுபோல அரிசி ஆலைகளை மீள இயங்கு நிலைக்குக் கொண்டுவர வடக்கு மாகாண சபையின் ஆளுநர் விரைவாக நடவடிக்கை எடுப்பதன் மூலம் அறுவடை செய்யப்படும் ஈரநெல்லை சுகாதார முறைப்படியும், பாதுகாப்பாகவும் காயவைத்து, அதனால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் ஆரோக்கியமான அரசியைப் பெற்று பயனடைய வழி அமையும் என இயற்கையின் நண்பர்கள் இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# புதுக்குடியிருப்பில் வீதியில் குப்பை கொட்டிய வர்த்தகருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு

(பா.சதீசன்)

புதுக்குடியிருப்பு நகரப்பகுதியில் வீதியில் குப்பைகளைக் கொட்டிய வர்த்தகர் ஒருவருக்கு எதிராக புதுக்குடியிருப்பு சுகாதார பரிசோதகர்களால் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு நகரில் இயங்கி வரும் வர்த்தக நிலையம் ஒன்றின் உரிமையாளர், வர்த்தக நிலையத்திற்கு முன்பாக வீதியில் குப்பைகளை கொட்டினார் எனக் கூறப்படுகின்றது. அந்த வர்த்தகருக்கு எதிராக சுகாதாரப் பரிசோதகர்களால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று முன் தினம் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக எதிர்வரும் மார்ச் 13 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கு எதிராக தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்படும் எனவும் வர்த்தகர்கள் சுகாதாரத்தை பேணி நடக்க வேண்டும் எனவும் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

# கண்டக்குழி கடற்கரைக்கான காபட் வீதியில் மோ. சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழப்பு!

## மற்றொருவருக்குப் படுகாயம்



(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

கற்பிட்டி கண்டக்குழி கடற்கரைக்கான காபட் வீதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளான சம்பவம் நேற்று முந்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் கற்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் ஒருவர் புத்தளம் தள வைத்தியசாலைக்கும் மற்றும் ஒருவர் கொழும்பு தீவிர சிகிச்சை பிரிவிற்கும் மாற்றப்பட்டனர்.

கொழும்பு அதி தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்தவர் நேற்று சனிக்கிழமை மாலை உயிரழந்துள்ளார்.

இவ் விபத்து சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை கற்பிட்டிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.
















# மில்கோவின் பால் குளிர் பதன சேமிப்பு நிலையம் வெலிஓயாவில் பிரதி அமைச்சரால் திறந்துவைப்பு

(பா.சதீசன்)

இலங்கையில் திரவப் பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் மில்கோ நிறுவனம் அமைத்துள்ள புதிய குளிர் பதன சேமிப்பு நிலையத்தின் திறப்பு விழா நேற்றறையதினம் முல்லைத் தீவு வெலிஓயா பகுதியில் கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவின் தலைமையில் நடைபெற்றது.

6 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இக்குளிர்பதன சேமிப்பு நிலையம், மில்கோ நிறுவனத்தின் 97 ஆவது குளிர்பதன நிலையமாக அதிகாரப்பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இந்நிலையம் பண்ணையாளர்களிடமிருந்து பெறப்படும் 5,000 லீற்றர் பாலை ஒரே நேரத்தில் சேமிக்கும் திறன் கொண்டதாக அமைந்துள்ளது.

இந்த திட்டத்துடன் இணையாக, மில்கோ நிறுவனத்திற்கு திரவஒ பால் வழங்கிய 16 விவசாயிகளுக்கு 1.2 மில்லியன் ரூபா மதிப்பிலான ஊக்கத் தொகை காசோலைகளும், பால் சேகரிப்பு கொள்கலன்களும் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவினால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மில்கோ நிறுவனத்தின் துணைத் தலைவர் புஷ்பகுமார கமகே, வடக்கு மாகாண மேலாளர் சம்பத் ஜெயசேகர, மில்கோ நிறுவன அதிகாரிகள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், அப்பகுதியை சேர்ந்த பால்பண்ணையாளர்கள் மற்றும் விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

இந்த குளிர்பதன சேமிப்பு நிலையத்தின் மூலம் வடக்கு மாகாணத்தில் திரவ பால் உற்பத்தி மேலும் ஊக்குவிக்கப்படுவதுடன், விவசாயிகளுக்கான வருமானமும் உறுதியாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.























# இன்று கும்பாபிஷேகப் பெருவிழா காணும் மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார்!



இலங்கையின் வடபகுதியிலுள்ள வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள நகரம் மானிப்பாய். இங்கு பல திருத்தலங்கள் காட்சி தருகின்றன. இவற்றுள் ஒன்றுதான் வேலக்கைப் பிள்ளையார் ஆலயம். இந்த ஆலயத்தின் பெயரைப் பார்த்துவிட்டு, இது விநாயகப் பெருமானின் திருத்தலம் என பலரும் நினைக்கலாம். அது தவறு.இங்கு முருகப் பெருமானே மூலமூர்த்தியாக வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

இங்கு எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானை அடியார்கள் 'வேலை கையில் ஏந்திய பிள்ளையாக போற்றித் துதித்து வருகிறார்கள். ஆரம்பகாலத்தில் 'வேலக்கைப் பிள்ளை' என அழைக்கப்பட்டதாகவும் காலப் போக்கில் இந்தப் பெயர் மருவி 'வேலக்கைப் பிள்ளையார்' என மாற்றமடைந்ததாகவும் சொல்லப்படுகிறது.

மானிப்பாய் பிரதேசத்தின் இன்னோரிடத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமான் தனக்கு அண்மித்த ஓரிடத்தில் தம்பியான முருகனை எழுந்தருளச் செய்வதற்கு திருவுளம் கொண்டதால் வேலை கையில் கொடுத்து (வேலை கையில் ஏந்திய பிள்ளையாக) இங்கு அனுப்பி வைத்ததாக செவிவழித் தகவல் சொல்கிறது. இந்த ஆலயத்தின் முகப்பில் காட்சிதரும் விநாயகர் தம்பியாரான முருகனுடன் ஒன்றிணைந்து இருப்பது போன்ற வரைபடம் ஆலயத்தின் பெயருக்கும் அதன் வரலாற்றுக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பை எடுத்துச் சொல்வதாக அமைந்திருக்கிறது என கருத இடமுண்டு.

இந்த ஆலயம் 150 வருடங்களுக்கும் மேற்பட்ட வரலாற்றுப் பெருமை கொண்டது. ஆலயம் குறிப்பிட்ட ஒரு பரம்பரையினருக்கு சொந்தமானது என்பதுடன் இந்தப் பரம்பரையின் வழித்தோன்றலாக வருபவர்களே ஆலயத்தை பரிபாலித்து நிர்வகிப்பவர்களாகவும் இருக்கிறார்கள்.

இந்தப் பரம்பரையைச் சேர்ந்தவரும் கோர்ட் முதலியாராகப் பணியாற்றி வந்தவருமான தம்பையா சிவக்கொழுந்து 1910ஆம் ஆண்டு வைகாசி மாதத்தில் தனது குடும்ப உறவினர்களுடனும் கிராமத்திலுள்ள அடியார்களுடனும் இணைந்து ஆலயத்தில் புனருத்தாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

இதன் பயனாக சிறியதாக இருந்த ஆலயக் கட்டடம் விஸ்தரிக்கப்பட்டது. அந்தவகையில் ஆலயத்தின் முன் மண்டபங்கள் அமைக்கப்பட்டன. இதேவேளையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை நிறுவுவதற்காக தனது சொந்தக் காணியையும் பெருந்தொகைப் பணத்தையும் வழங்கிய வள்ளலாகப் போற்றப்படும் வேலாயுதம் சங்கரப்பிள்ளை என்பவர் மற்றுமொரு கைங்கரியமாக இந்த ஆலயத்துக்கான நுழைவாயில் கோபுரத்தை தனது சொந்தச் செலவில் 1911 ஆம் ஆண்டில் அமைத்துக் கொடுத்தார்.

ஆலயத்தின்கட்டடவேலைகள்நிறைவு பெற்றதைத் தொடர்ந்து நித்திய பூஜை வழிபாடுகள் கிரமமாக ஆரம்பிக்கப்பட்டன. தொடர்ந்து அலங்கார உற்சவங்களும் தொடங்கப்பட்டன. சில வருடங்களின் பின் கொடித்தம்பம் அமைக்கப்பட்டு மகோற்சவப் பெருவிழா நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வெற்றிகரமாக நிறைவேற்றி வைக்கப்பட்டது. முருகப் பெருமான் வள்ளி தெய்வயானை சமேதராக தேரில் எழுந்தருளி வீதிவலம் வந்து அடியார்களுக்கு காட்சி கொடுத்ததுடன் தீர்த்தோற்சவமும் இடம் பெற்று வந்தது.

ஆலய பரிபாலகர் த. சிவக்கொழுந்து மறைவின் பின்னர் அவரது புதல்வர்களான முத்துக்குமாரசாமிரூபவ் இராஜேந்திரம் ஆகியோர் இணைந்து ஆலய பரிபாலன செயற்பாடுகளை மேற்கொண்டதுடன் ஆலயத்தின் வளர்ச்சியில் இவர்கள் பெரிதும் பங்கெடுத்தனர்.

1975 ஜுலை 2ஆம் திகதியன்று முத்துக்குமாரசாமியின் மறைவுக்குப் பின்னர் இவரது புதல்வரான சிவகுமாரன் ஏற்கனவே ஆலய பரிபாலனத்தை மேற்கொண்டு வந்த இராஜேந்திரத்துடன் இணைந்து ஆலயத்தை நிர்வகித்து வந்தார்.

1995ஆம்ஆண்டுஇராஜேந்திரம்காலமாகியதால் அவரது புதல்வர்களான நீதவான் இ. வசந்தசேனன், இ.வசந்தகுமார் ஆகியோர் சிவகுமாரனுடன் இணைந்து ஆலய பரிபாலனத்தை முன்னெடுத்தனர். இதன்பின் இ.வசந்தகுமாரின் மறைவைத் தொடர்ந்து அவரது புதல்வர் வ.இராஜேந்திரம் (ராஜ்) ஆலய நிர்வாகத்தில் இணைந்து கொண்டார். இப்போது மு. சிவகுமாரன், இ.வசந்தசேனன், வ. இராஜேந்திரம் (ராஜ்) ஆகியோர் ஆலய அறங்காவலர்களாகவிருந்து ஆலயத்தை பரிபாலித்து நிர்வகித்து வருகிறார்கள்.

இவர்களது பரிபாலன செயற்பாடுகளுக்குஉறவினர்களும்உற்சவஉபயகாரர்களும் முருகப் பெருமான்மீது தீவிர பக்தி கொண்ட மானிப்பாய் பிரதேச அடியார்களும் இணைந்து ஆலய வளர்ச்சிக்குத் தேவையான உதவிகளையும் ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கி வருகிறார்கள்.

இந்த ஆலயத்தில் சிவஸ்ரீ ந.சுப்பிரமணியக் குருக்கள் பிரதம குருவாகப் பணியாற்றி வருவதுடன் நித்திய நைமித்தியக் கருமங்களையும் மேற்கொண்டு வருகிறார். இங்கு தினமும் மூன்று காலப் பூஜைகள் இடம்பெற்று வருகின்றன.

இங்கு வருடாந்த மகோற்சவம் சித்திரை மாதத்து பூரணை தினத்தை தீர்த்தமாகக் கொண்டு பன்னிரண்டு நாள்கள் இடம்பெற்று வருகிறது. முதல் நாளன்று கொடியேற்றத் திருவிழாவும் ஏழாவது நாளன்று மஞ்சத் திருவிழாவும் பதினொராவது நாளன்று சப்பரத் திருவிழாவும் பன்னிரண்டாவது நாளன்று காலையில் தேர்த் திருவிழாவும் மாலையில் தீர்த்தத் திருவிழாவும் இரவு கொடியிறக்கத் திருவிழாவும் நடைபெறுவது வழக்கம். பதின்மூன்றாவது நாளன்று பூங்காவனத் திருவிழா இடம்பெறுகிறது.

இந்த ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தப் பணிகள் நிறைவு பெற்றதைத் தொடர்ந்து புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகப் பெருவிழா தைப்பூச நன்னாளாகிய இன்று நடைபெறுகிறது.

சுன்னாகம் மயிலணி சிவஸ்ரீ சோ. ரஜதகிரீசக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் மகா கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்தி வைப்பார்கள். தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று, இறுதி நாளான இம்மாதம் 12 ஆம் திகதியன்று பகல் விசேட சங்காபிஷேகமும் மாலை திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறவுள்ளன.

**- அ. கனகசூரியர்.**

# பூசத் திருநாள் பொலிவுடைத் திருநாள்!

மார்கழி மாதம் மாண்புடை மாதம்
மாதவன் சிவனை வாழ்த்திடும் மாதம்
கோதைத் தமிழும் வாசகர் தமிழும்
இறையின் தத்துவம் இயம்பிடும் மாதம்

இறையின் தத்துவம் இயம்பிடும் வகையில்
மாதங்கள் அனைத்தையும் வைத்தனர் முன்னோர்
தையில் தொடங்கி மார்கழி வரைக்கும்
தத்துவம் சமயம் வைத்தனர் முன்னோர்



மார்கழி மகத்துவம் தொடரும் வகையில்
தையில் பொங்கல் தைப்பூசத் திருநாள்
ஆன்மீகம் அறிவியல் அனைத்தும் அளிக்கும்
அற்புத நாளாய் அமைவது சிறப்பே

உலக சிருஷ்டி தொடங்கிய நாளாய்
அமைவதே தைப் பூசத் திருநாள்
சக்தியும் சிவனும் ஐக்கிய மாகும்
முக்கியம் மிக்கதும் இத் திருநாளே

நீரும் சிவனே நெருப்பும் சிவனே
மண்ணும் சிவனே விண்ணும் சிவனே
சிவனின் நினைப்பால் வந்தவன் கந்தன்
கந்தனைத் தந்ததும் தைப்பூச நன்னாள்

கந்தனின் கையில் வேலினைக் கொடுத்து
வந்திடு வினைகளைப் போக்கிடும் வகையில்
செந் திருவான சக்தியின் செயலும்
அமைந்த நன்னாளே தைப்பூசத் திருநாள்

காவடி எடுப்பார் கந்தனின் சன்னதி
கந்தனை எண்ணியே சன்னதி குவிவார்
தைப்பூசத் திருநாள் கந்தனின் பெருநாள்
எண்ணியே எண்ணியே அடியவர் பரவுவார்

நல்லன அனைத்தும் தொடங்கிடும் நாளாய்
தைப்பூசத் திருநாள் அமைவதே முக்கியம்
ஏடு தொடக்குவார் காதும் குத்துவார்
இறை நினைப்புடனே எல்லாம் தொடங்குவார்

பூசத் திருநாள் பொலிவுடைத் திருநாள்
பொங்கலை  அடுத்து வந்திடும் பெருநாள்
பக்தியை விதைக்கும் பக்குவத் திருநாள்
இத்தரை சிறக்க மலர்ந்திடும் பெருநாள்!



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,
மேனாள் தமிழ் மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.

# சிறப்பு வாய்ந்த ஆன்மிக திருநாள் தைப்பூசம்...!

தைப்பூசம் தமிழர் மரபில் மிகச் சிறப்பு வாய்ந்த ஆன்மிகத் திருநாளாகும். தை மாதத்தில் பூச நட்சத்திரம் கூடும் நாளில் இந்த விழா கொண்டாடப் படுகிறது.

இந்த வருடத்துக்கான தைப்பூசம் இன்று ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுகிறது.

தைப்பூசம் குறிப்பாக முருகப்பெருமானை மையமாகக் கொண்டு சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது. பார்வதித் தாயார் முருகனுக்கு வேலாயுதம் வழங்கி, அவர் அசுரர்களை அழித்து தர்மத்தை நிலைநாட்டிய தினமே தைப்பூசமாக கருதப்படுகிறது.

அதாவது தீமையை அழித்து நன்மையை நிலைநாட்டிய நன்னாள் இது.

இந்த நாளில் பக்தர்கள் உடல், மன தூய்மையுடன் விரதம் இருந்து முருகப் பெருமானை வழிபடுவர்.

தைப்பூசத்தில்தான் இலங்கை குறிப்பாக கிழக்கு மற்றும் வடக்கு மக்கள் புதிர் எடுப்பர்

காவடி எடுப்பது, பால் காவடி, பன்னீர் காவடி, இளநீர் காவடி போன்ற நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவது தைப்பூசத்தின் முக்கிய நிகழ்வுகளாகும். சிலர் தமது துன்பங்கள் நீங்கவும், வேண்டுதல்கள் நிறைவேறவும் கடும் தவம் மேற்கொண்டு ஆலயங்களுக்கு பாதயாத்திரையாகச் செல்வதும் வழக்கமாக உள்ளது.

தைப்பூசம் மனிதனுக்குள் உள்ள அகந்தை, தீய எண்ணங்களை அழித்து, தன்னடக்கம், தியாகம், பொறுமை ஆகிய உயரிய பண்புகளை வளர்க்கும் திருநாளாகும். பக்தி உணர்வும் சமூக ஒற்றுமையும் ஒருங்கிணைந்து வெளிப்படும் இந்த திருவிழா, தமிழர் பண்பாட்டின் ஆன்மிக உயர்வை உலகுக்கு உணர்த்துகிறது.



**வித்தகர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா, காரைதீவு நிருபர்.**

# நாடு முழுவதும் அதிரடிச் சுற்றிவளைப்பு: 24 மணித்தியாலங்களில் 523 பேர் கைது



பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் 523 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதேநேரம், 28,470 பேர் பரிசோதிக்கப்பட்டுள்ளதுடன், 09 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 226 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 161 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 382 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 73 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4,211 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.







# நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிப்பது உயர்தரமான மனித வளத் தளமாகும்

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

நாட்டின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கு உயர்தரமான மனித வளத் தளத்தை உருவாக்குவது அவசியம் என்றும் அந்த முயற்சிக்குக் கல்வி தான் மையப்புள்ளி என்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற "EDCS சிசு நேன பிரணாம" புலமைப் பரிசில் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வேகமாக மாறிவரும் உலகளாவிய பொருளாதார மற்றும் சுற்றுச் சூழல் சவால்களை எதிர்கொள்ளும் வகையில், பாடசாலை மட்டத்திலிருந்தே கல்வியைப் பலப்படுத்த அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் சுமார் 300,000 மாணவர்கள் ஆரம்பக் கல்வியில் நுழைகிறார்கள், ஆனால் சுமார் 40,000 பேரே அரச பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவாகின்றனர்.

இந்த வாய்ப்பைப் பெறும் மாணவர்கள் தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக்கொண்டு தேசிய வளர்ச்சிக்குப் பங்களிக்க வேண்டும் என பிரதமர் கூறினார்.

அத்துடன் 1930 இல் வெறும் 58 உறுப்பினர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட கல்விச் சேவை ஊழியர் கூட்டுறவுச் சங்கம், இன்று 215,000 உறுப்பினர்களுடன் தெற்காசியாவிலேயே மிகப் பெரிய கூட்டுறவுச் சங்கமாக வளர்ந்துள்ளதைப் பிரதமர் பாராட்டினார்.

மேலும் 2,292 மாணவர்களுக்கு ரூ. 13.7 மில்லியனுக்கும் அதிகமான புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

தற்போது ஒரு மாணவருக்கு 75,000 ரூபா வரை நிதியுதவி வழங்கப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, ஊழலற்ற நிர்வாகத்தினால் இச்சங்கத்தின் நிதி பலம் ஒன்பது மாதங்களில் 1.2 பில்லியன் ரூபாவிலிருந்து 1.7 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதாகப் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

இந்த விழாவில் கல்வி அதிகாரிகள், இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் மற்றும் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.













# நாட்டில் மீண்டும் மழை பெய்யும்



நாட்டில் வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலும், மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும் என வளி மண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வடக்கு மாகாணத்திலும், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படு கின்றது.

மேலும் ஊவா மற்றும் வடமேல் மாகாணங்ககளில் பல தடவைகள் மழை பெய்யக்கூடும்.

இந்தநிலையில் இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் குறித்த பகுதிகளில் வீசக்கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத் துக்கொள்ளப் பொதுமக்கள் தேவை யான முன்னெச்சரிக்கை நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறு அறிவுறுத் தப்பட்டுள்ளது.




# மேலும் 10 பெய்லி பாலங்களை இலங்கைக்கு அனுப்பிய இந்தியா





டித்வா சூறாவளியினால் பாதிக்கப் பட்ட பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதி களை மீண்டும் கட்டியெழுப்புவதற் காக, 10 பெய்லி பாலங்களை இந்தியா இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சு தெரி வித்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சின் ஊடகப்பேச்சாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

இதன்படி இந்திய கடற்படைக்கப்பலான “ஐ.என்.எஸ். கரியால்“ மூலம் விசாகப் பட்டினத்திலிருந்து கொழும்பு துறைமு- கத்திற்கு இந்த பாலங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

சூறாவளியால் போக்குவரத்து துண் டிக்கப்பட்டுள்ள பகுதிகளில் அவசர இணைப்புகளை ஏற்படுத்தி, இயல்பு நிலையை மீட்டெடுப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்தபோது அறிவிக்கப்பட்ட 450 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான “சிறப்பு பொருளாதாரப் பொதியின்” ஒரு அங்கமாக இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

அவசரமனிதாபிமானமற்றும்அனர்த்த நிவாரண உதவிகளைத் தொடர்ந்து, இலங்கையின் மறுசீரமைப்புப் பணி களிலும் இந்தியா துணை நிற்ப தாக ரந்தீர் ஜெய்ஸ்வால் குறிப்பிட்டுள் ளார்.




# நாளை முதல் வைத்தியர்களின் தொடர் வேலைநிறுத்தம் தீவிரம்

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எதிர்வரும் நாளை முதல் தொடர்ச்சியான வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் பல கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 26ஆம் திகதி முழு வைத்தியசாலை அமைப்பையும் உள்ளடக்கி தொடர்ச்சியான வேலைநிறுத்த போராட்டத்தை ஆரம்பித்திருந்தது.

இதன்போது, கடந்த 26 ஆம் திகதி கூடிய அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு, அவர்களின் பிரச்சினைகளுக்கு நேர்மறையான தீர் வைக்கொண்டுவந்து அதை அறிவிக்க சுகாதார அமைச்சிக்கு 48 மணிநேர அவகாசம் வழங்க தீர்மானித்தது.

இருப்பினும், சுகாதார அமைச்சு, அதற்கான தீர்வினை வழங்காததால், நாளை 02ஆம் திகதி முதல் வேலை நிறுத்த போராட்டத்தை தீவிரப்படுத்தவும், அதைத் தொடரவும் தீர்மானித்துள்ளது.

அதன்படி, இது தொடர்பாக சங்கத்தின் நிர்வாகக் குழுவின் அவசரக் கூட்டம் நேற்று காலை நடைபெற்றது.

வைத்தியசாலையில் கிடைக்காத மருந்துகள் மற்றும் உபகரணங்களைப் பெறுவதற்காக நோயாளர்களுக்கு மருந்துச் சீட்டுகளை வழங்குவதை நிறுத்தி வைத்தல், வைத்தியசாலையில் கிடைக்காத ஆய்வக சோதனைகளை நடத்துவதற்காக நோயாளர்களுக்கு மருந்துச் சீட்டுகளை வழங்குவதை நிறுத்தி வைத்தல், அரசியல் குழுக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட சுகாதார முகாம்கள் மற்றும் வைத்தியசாலைகளில் தன்னார்வ பங்கேற்பிலிருந்து விலகுதல், அங்கீகரிக்கப்பட்ட வைத்தியர்களின் எண்ணிக்கை இல்லாமல் வைத்தியசாலை அமைப்பில் திறக்கப்பட்ட புதிய வைத்தியசாலை வார்டுகள் மற்றும் பிரிவுகளுக்கு வைத்தியர்களை நியமிப்பதை நிறுத்தி வைத்தல், உள்ளிட்ட நடவடிக்கைகளை அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் செயல்படுத்த தீர்மானித்துள்ளது.



# டித்வா புயல் தாக்கம் காரணமாக மரக்கறி விலை தொடர் அதிகரிப்பு

டித்வா சூறாவளியின் தாக்கம் இன்னும் நீடிப்பதால், மரக்கறிகளின் விலைகள் வழமையான ஆண்டுகளை விட உயர்வாகவே காணப்படுவதாக பேலியகொட மெனிங் சந்தை வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

மெனிங் சந்தை வர்த்தகர் சங்கத்தின் முன்னாள் தலைவர் எஸ்.எம். உபசேன இது குறித்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில், கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் விலைகள் ஓரளவு குறைந்திருந்தாலும், வழமையான காலப்பகுதியில் நிலவும் குறைந்த விலைக்கு இன்னும் வரவில்லை எனக் குறிப்பிட்டார்.

அத்துடன், சூறாவளி காரணமாக மரக்கறி விநியோகம் சுமார் 25 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இந்தநிலையில் ஒரு கிலோகிராம் லீக்ஸ் 400 ரூபாயாகவும், ஒரு கிலோகிராம் கெரட் 350 ரூபாயாகவும், ஒரு கிலோகிராம் தக்காளி 350 ரூபாயாகவும், ஒரு கிலோகிராம் பச்சை மிளகாய் 500 ரூபாயாகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன என அவர் கூறினார்.

நவம்பர் மாத இறுதியில் நிலவிய சீரற்ற காலநிலை மற்றும் சூறாவளி காரணமாக பயிர்ச்செய்கைகள் பாதிக்கப்பட்டமையே இந்த விலை ஸ்திரத்தன்மையின்மைக்கு முக்கிய காரணமாகும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.




# விலைச் சூத்திரத்திற்கு அமைய எரிபொருள் விலையில் மாற்றம்

எரிபொருள் விலை சூத்திரத்திற்கு அமைய, எரிபொருட்களின் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, பெட்ரோல் 92 ஒக்டேன் மற்றும் ஒட்டோ டீசல் லீற்றரொன்றின் விலை தலா 2 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளன.

இந்த விலைக்குறைப்பைத் தொடர்ந்து, ஒரு லீற்றர் பெட்ரோல் 92 ஒக்டேனின் புதிய விலை 292 ரூபாவாகவும், ஒட்டோ டீசலின் புதிய விலை 277 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் இந்த விலை மாற்றங்கள் அமுலுக்கு வரும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அதேவேளை, பெட்ரோல் 95 ஒக்டேன் விலை 340 ரூபாவாகவும் சுப்பர் டீசல் விலை 323 ரூபாவாகவும் மண்ணெண்ணெய் விலை 182 ரூபாவாகவும் எவ்வித மாற்றமும் இன்றி அதே விலையில் விற்பனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.




# லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின் எரிபொருள் விலை குறைப்பு

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் விலை மாற்றங்களுக்கு நிகராக, லங்கா ஐ.ஓ.சி. நிறுவனமும் தமது விலையை மாற்றியமைப்பதாக அறிவித்துள்ளது.

எரிபொருள் விலை சூத்திரத்திற்கு அமைய, நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள்களின் விலையில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# மகாராஷ்டிராவின் பெண் துணை முதல்வராக மறைந்த அஜித் பவாரின் மனைவி பதவியேற்பு



ராஜ்யசபா எம்.பி.யும், மறைந்த அஜித் பவாரின் மனைவியுமான சுனேத்ரா பவார், என்.சி.பி. சட்டப்பேரவை கட்சித் தலைவராக நேற்று தேர்ந்தெடுக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து அவர் மகாராஷ்டிராவின் துணை முதல்வராகப் பதவியேற்றார். இதையடுத்து, மகாராஷ்டிராவின் முதல் பெண் துணை முதல்வர் என்ற சிறப்பை அவர் பெற்றார்.

விமான விபத்தில் அஜித் பவார் உயிரிழந்ததை அடுத்து, தேசியவாத காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக, நேற்று மதியம் நடந்த கூட்டத்தில், சட்டப்பேரவை கட்சித் தலைவராக சுனேத்ரா பவார் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். என்.சி.பி. கட்சியின் செயல் தலைவர் பிரபுல் படேல் மற்றும் மாநிலத் தலைவர் சுனில் தட்கரே உள்ளிட்ட என்.சி.பி. தலைவர்கள், மும்பையில் உள்ள விதான் பவனில் கூடி, சுனேத்ரா பவாரின் பெயரை முன்மொழிந்தனர்.

சுனேத்ரா பவார் என்.சி.பி. சட்டப்பேரவைக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, என்.சி.பி .தலைவர்கள் மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர ஃபட்னாவிசை சந்தித்து அதற்கான கடிதத்தை வழங்கியது.

இதனைத் தொடர்ந்து, லோக் பவனில் சிறிய அளவில் நடந்த பதவியேற்பு விழாவில் சுனேத்ரா பவார் துணை முதல்வராக பதவியேற்றார். சுனேத்ரா பவாருக்கு மகாராஷ்டிர ஆளுநர் ஆச்சார்யா தேவவிரத் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வில் முதல்வர் தேவேந்திர ஃபட்னாவிஸ், துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டே மற்றும் அமைச்சர்கள் கலந்துகொண்டனர். ராஜ்ய சபா உறுப்பினரான 62 வயதான சுனேத்ரா பவார், மகாராஷ்டிர சட்டப்பேரவையின் இரு அவைகளிலும் உறுப்பினராக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, மகாராஷ்டிர துணை முதல்வராக இருந்த அஜித் பவார் கடந்த 28 ஆம் திகதி விமான விபத்தில் உயிரிழந்தார். இதையடுத்து, மகாராஷ்டிர அரசியலில் திடீரென ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை தொடர்ந்து, துணை முதல்வர் பதவிக்கான முன்மொழிவை அவரது மனைவி சுனேத்ரா பவார் ஏற்றுக் கொண்டார்.

# பழனிசாமி அரசியல் அத்தியாயத்திற்கு 2026ஆம் ஆண்டு தேர்தலோடு முடிவுரை

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவிப்பு





“தமிழ்நாட்டில் இனி ஒரு நாளும் பா.ஜ.கவின் அடிமை ஆட்சி அமையப் போவதில்லை, பழனிசாமியின் அரசியல் அத்தியாயத்திற்கு 2026 தேர்தலோடு முடிவுரை எழுதப்படப் போகிறது.”

– இவ்வாறு தமிழக வேளாண்மை துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,

“தமிழ்நாட்டில் தி.மு.க. கூட்டணிதான் வெற்றி பெறும் என்றும் தமிழ்நாட்டில் பெண்களின் பெரும்பான்மையான ஆதரவு தி.மு.கவிற்குத்தான் உள்ளது என்றும் முன்னணி ஊடகங்களில் கருத்துக் கணிப்புகள் வெளியாகி, தமிழ்நாட்டு மக்களின் உணர்வைப் பிரதிபலித்துக் கொண்டிருப்பதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், வெற்றி கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை, அவதூறுகளையாவது அள்ளித் தெளிப்போம் என சூனா பானாவாக கிளம்பிவிட்டார் பழனிசாமி.

மீண்டும் தி.மு.க. ஆட்சியைப் பிடிக்கும் என்ற கருத்துக்கணிப்புகளால் விரக்தியில் என்ன செய்வது என்று தெரியாமல் அறிக்கை என்ற பெயரில் கிறுக்கித் தள்ளியிருக்கிறார் பழனிசாமி.

டில்லியில் சதித்திட்டம் தீட்டி சர்வாதிகார எண்ணத்தோடு தமிழ்நாட்டின் மீது ஏவப்படும் எந்த ஆதிக்கத்தையும் வெற்றியடைய விடமாட்டோம். எந்தக் கொம்பனாலும், தமிழ்நாட்டைத் தலைதாழ்த்தி விட முடியாது என்பதில் உறுதியாகப் போரடிக் கொண்டிருப்பது திராவிட மொடல் அரசும் தமிழக முதல்வரும் தான். ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டுக்குச் செய்யும் அநீதிகளுக்கும் அவர்களது தமிழ்ப் பகை நடவடிக்கைகளுக்கும் எதிராக ‘தமிழ்நாட்டைத் தலைகுனியவிட மாட்டேன்’ என்று சொன்னால் பழனிசாமிக்கு ஏன் எரிகிறது?

டில்லி ஓனர்களுக்கு அடிமையாக வாழ்வதிலே தனக்கு நிகராக யாரும் வந்துவிடக் கூடாது எனப் போட்டி போட்டுக்கொண்டிருக்கும் வாழ்நாள் அடிமை பழனிசாமி, சரித்திரப் புத்தகங்கள், சர்வாதிகாரிகள் என்றெல்லாம் நகைச்சுவை செய்துகொண்டிருக்கிறார். ஜனநாயகத்தைச் சீரழித்து இந்த நாட்டையே சர்வாதிகார ஆட்சியாக்கிவிடும் நோக்கத்தோடு நாளும் பொழுதும் ஆதிக்கத் திட்டங்களைச் செயல்படுத்துக் கொண்டிருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. மோடி என்ற சர்வாதிகாரியைப் போற்றிக் கொண்டிருக்கும் பழனிசாமி, சர்வாதிகாரி பற்றியெல்லாம் பாடம் எடுக்க அருகதை இருக்கிறதா?

தமிழ்நாட்டில் திராவிட மொடல் 2.0 ஆட்சிதான் மீண்டும் அமையப் போகிறது. தமிழ்நாட்டில் இனி ஒரு நாளும் பா.ஜ.கவின் அடிமை ஆட்சி அமையப் போவதில்லை, பழனிசாமியின் அரசியல் அத்தியாயத்திற்கு 2026 தேர்தலோடு முடிவுரை எழுதப்படப் போகிறது என்கிற உண்மைகள் சுடுவதால் விரக்தியில் பழனிசாமி உதிர்த்து வரும் உளரல்கள் உண்மையாகிவிடாது.” எனத் தெரிவித்துள்ளார்.





# காசா மீதான இஸ்ரேலியத் தாக்குதலில் குழந்தைகள் உட்பட 30 பேர் உயிரிழப்பு

காசா மீது இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதல்களில் பல குழந்தைகள் உட்பட குறைந்தது 30 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர் என காசாவில் உள்ள மருத்துவமனைகள் தெரிவித்தன. இது ஒக்டோபர் மாத போர்நிறுத்தத்திற்குப் பிறகு ஏற்பட்ட மிக உயர்ந்த உயிரிழப்புகளில் ஒன்றாகும்.

இந்தத் தாக்குதல்கள் காசா முழுவதும் உள்ள இடங்களில் நடந்துள்ளது. கான் யூனிஸில் உள்ள முகாமில் நடந்த தாக்குதல் தீ விபத்தை ஏற்படுத்தியதாகவும், இதில் ஒரு தந்தை, அவரது மூன்று குழந்தைகள் மற்றும் மூன்று பேரக்குழந்தைகள் உட்பட ஏழு பேர் கொல்லப்பட்டனர் என நாசர் மருத்துவமனை தெரிவித்துள்ளது.

காசா நகரில் உள்ள அடுக்குமாடிக் கட்டடத்தின் மீதான தாக்குதலில் மூன்று குழந்தைகள், அவர்களின் அத்தை மற்றும் பாட்டி ஆகியோர் கொல்லப்பட்டனர் என ஷிஃபா மருத்துவமனை தெரிவித்துள்ளது.

அதேபோல பொலிஸ் நிலையம் மீதான தாக்குதலில் நான்கு பெண் போலீஸார், பொதுமக்கள் மற்றும் கைதிகள் உட்பட 14 பேர் கொல்லப்பட்டனர் என ஷிஃபா மருத்துவமனை தெரிவித்துள்ளது. ஜபாலியா அகதிகள் முகாமுக்கு கிழக்குப் பகுதியில் நடந்த தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் என ஷிஃபா மருத்துவமனை தெரிவித்துள்ளது.

காசாவின் தென்கோடி நகரமான ரஃபாவில் எகிப்துடனான எல்லைப்பகுதி இன்று திறக்கப்படவுள்ள நிலையில் இந்த தாக்குதல்கள் நடந்துள்ளன. பெரும்பாலான மருத்துவ உள்கட்டமைப்புகள் அழிக்கப்பட்ட காசாவுக்கு வெளியே சிகிச்சை தேவைப்படும் பாலஸ்தீனியர்கள் ரஃபாவை ஒரு உயிர்நாடியாக பார்க்கின்றனர்.

போர்நிறுத்தத்தின் மத்தியஸ்தர்களில் ஒருவரான எகிப்து, தனது அறிக்கையில் இஸ்ரேலியத் தாக்குதல்களை மிகக் கடுமையாக கண்டித்ததுடன், இந்த தாக்குதல்கள் போர்நிறுத்தத்தின் அரசியல் போக்கிற்கு நேரடி அச்சுறுத்தலாக இருக்கின்றன என்றும் எச்சரித்தது.

இஸ்ரேலின் தாக்குதல்களை “மீண்டும் ஒரு அப்பட்டமான போர் நிறுத்த மீறல்” என்று ஹமாஸ் அழைத்ததுடன், இந்தத் தாக்குதல்களை நிறுத்த இஸ்ரேலை வலியுறுத்துமாறு அமெரிக்காவையும் மற்ற மத்தியஸ்த நாடுகளையும் கேட்டுக்கொண்டது.

ஒக்டோபர் மாதம் முதல் ஹமாஸின் போர்நிறுத்த ஒப்பந்த மீறல்களுக்குப் பதிலடியாகவே தனது தாக்குதல்கள் இருந்தன என்றும் இஸ்ரேல் பதிலளித்துள்ளது.


போர்நிறுத்தம் தொடங்கியதிலிருந்து இஸ்ரேலியத் தாக்குதல்களில் இதுவரை 520 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர் என காசா நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# முழு பிரித்தானியாவிலும் ஒரு வார வேலைநிறுத்தம்

முழு பிரித்தானியாவும் ஒரு வாரம் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவேண்டும் என புலம்பெயர்தல் எதிர்ப்பு அமைப்பு ஒன்று அழைப்பு விடுத்துள்ளது.

பிரித்தானியாவை மையமாகக் கொண்டு செயல்படும் வுந புசநயவ டீசவைளை யேவழையெட ளுவசமைந என்னும் அமைப்பின் தலைவரான ரிச்சர்ட் டொலால்ட்சன் என்னும் நபர், பிரித்தானியர்கள் அனைவரும் ஒரு வாரம் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார்.

வேலைநிறுத்தம் என்பது அலுவலகங்களில் மட்டும் அல்ல, பிள்ளைகள் பாடசாலைக்கு செல்வது, மக்கள் பொருள்கள் வாங்க செய்வது என எல்லா விடயங்களையும் ஒரு வாரத்திற்கு நிறுத்தவேண்டும் என வலியுறுத்தியுள்ளார் ரிச்சர்ட்.




இந்த வேலைநிறுத்தம், நாளை முதல் 9ஆம் திகதி வரை நீடிக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

புலம்பெயர்தலைக் கட்டுப்படுத்துவது என்பது, அரசியல்வாதிகள் நடிப்பது போல் உண்மையில் சிக்கலானது அல்ல என்றும், பிரித்தானியா, சட்டவிரோத புலம்பெயர்ந்தோரையும், மோசமான குற்றச்செயல்களில் ஈடுபடும் வெளிநாட்டவர்களையும் அவர்களுடைய குடும்பத்தினரையும், குறிப்பிட்ட காலத்துக்கு மேல் வேலையில்லாமல் இருப்பவர்களையும் நாடுகடத்தவேண்டும் என்றும் கூறியுள்ளார் ரிச்சர்ட்.

புலம்பெயர்தலால் ஏற்பட்ட பாதிப்பை சரி செய்து மீண்டும் கட்டுப்பாட்டைக் கையில் எடுக்கும் வரை புலம்பெயர்தல் விண்ணப்பங்களை பரிசீலிப்பதை தற்காலிகமாக நிறுத்திவைக்கவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.02.2025




இன்று கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரலாம். நீங்கள் இதில் முழு ஆற்றலையும் செலுத்த வேண்டியிருக்கும். பொழுதுபோக்கிற்கென சிறிது நேரமே ஒதுக்க வேண்டியிருக்கும். நீங்கள் இன்று அமைதியாக இருக்கவேண்டும்.

நீங்கள் கூடுதல் பொறுப்புகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் காணப்படும். இது உங்களுக்கு வருத்தம் அளிக்கும். மேலும் நீங்கள் பணிகளை கவனமாக கையாள வேண்டியிருக்கும்.

உங்கள் துணையுடன் பேசும் போது உங்கள் பேச்சில் கவனம் வேண்டும். உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் வகையில் கவனமற்ற வார்த்தைகளை நீங்கள் பேச வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று நீங்கள் சௌகரியமாக உணர்வீர்கள். இனிமையான வார்த்தைகள் மூலம் நீங்கள் பலனடைவீர்கள். இதனால் உங்கள் தன்னம்பிக்கை வளரும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க சாத்தியமாகலாம். நீங்கள் உங்கள் மன உறுதியால் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நேர்மையான நம்பிக்கையான உறவு கொண்டிருப்பீர்கள். இன்று மிகுந்த மகிழ்ச்சியும் திருப்தியும் காணப்படும்.

இன்று நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படும். உங்கள் சொத்து அதிகரிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. முக்கிய முதலீடுகளில் பங்கு கொள்வதன் மூலம் லாபம் பெறலாம்.

இன்று உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. உங்களின் ஆற்றலை நீங்கள் சிறப்பாக பராமரிப்பீர்கள்.




இன்று உங்கள் மனதில் தெளிவு காணப்படும். இதனால் உங்கள் செயல்களை திறமையாக ஆற்றுவீர்கள். பொருத்தமான செயல்களை செய்து உங்கள் நிலையை மேம்படுத்துவீர்கள். இனிமையான வார்த்தைகள் உங்களுக்கு பல நல்ல பலன்களை அளிக்கும்.

பணியிடத்தில் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு பதவி உயர்வு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் வெளிப்படையாக கருத்துக்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் குடும்ப வளர்ச்சி பற்றிய ஆலோசனை நடத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். லாபம் தரும் முதலீட்டிற்கான பயனுள்ள திட்டங்களில் பங்கு கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.




இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் அமைதியை உணர்வீர்கள். கூடுதல் பொறுப்புகள் உங்களுக்கு கவலை அளிக்கும். இரவில் தூக்கமின்மை காணப்படும்.

நீங்கள் சிறந்த பலனைக் காண மிகக் கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் பணியில் வெற்றி பெற நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். இந்த அனுபவம் திருப்தி அளிக்கும்.

உங்கள் துணையுடன் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்றைய தேவைகளை பூர்த்தி செய்வது கடினமாக காணப்படும்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம்.




இன்று அதிருப்தியான நிலை காணப்படும். அனுசரணையான போக்கு உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். சிறந்த பலன் காண உங்கள் தன்னம்பிக்கையை அதிகரித்துக் கொள்ள வேண்டும். உங்கள் எதிர்காலத்திற்காக நீங்கள் திட்டமிட வேண்டும்.

சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிக்க நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும். பணியில் கவனமாக இருப்பதன் மூலம் தவறுகள் நேராமல் தவிர்க்கலாம். தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் கவனமாக பணியாற்றவும்.

உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சி நிலவ வேண்டுமெனில் நீங்கள் உங்கள் துணையிடம் சகஜமாகப் பேச வேண்டும்.

பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். பல வாய்ப்புகள் உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். நேரத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். இன்றைய நாளின் பலன்கள் உங்களுக்கு திருப்தி அளிக்கும்.

நீங்கள் பொறுப்புடனும் சிரத்தையுடனும் பணியாற்றுவீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி அடைவீர்கள். கடினமான பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பேசுவீர்கள். இது உங்கள் துணையை மகிழ்விக்கும். இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சீராக இருக்கும். பணத்தை நீங்கள் பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று உங்களிடம் சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.




இன்றைய நிகழ்வுகள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக இருக்கும். கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள். உங்கள் செயல்களில் கவனமாக இருக்க வேண்டும். இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்கும். நீங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள். மொத்ததில் உங்கள் செயல் திறனில் திருப்தி காணப்படும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.நிதிநிலைமை உங்களுக்கு சாதகமாகவும் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள போதுமானதாகவும் இருக்கும். உங்களால் சேமிப்பு நிலையை உயர்த்த இயலும்.




இன்று செயல்கள் சீராக நடக்க சாதகமாக இருக்காது. இன்று அதிக பொறுப்புகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். உங்களை மகிழ்ச்சியாக வைத்திருங்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. கூடுதல் பணிகள் காரணமாக திட்டமிட்டபடி பணிகளை செய்வது கடினமாக இருக்கும்.

நீங்கள் உங்கள் துணையுடன் உணர்ச்சிவசப்பட்டு நடந்து கொள்வீர்கள். உறவில் மகிழ்ச்சி நிலவ இத்தகைய போக்கை தவிர்க்க வேண்டும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். உங்களுக்கு கூடுதல் செலவுகள் ஏற்படும். எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.02.2025




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. நீங்கள் சமநிலை இழப்பீர்கள். நற்பலன்கள் காண எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். முக்கிய முடிவுகள் இன்று சிறந்த பலன் அளிக்காது.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். பணிகள் சலிப்பூட்டுவதாக இருக்கும். நீங்கள் சிறந்த பணி மாற்றம் விரும்புவீர்கள். அது இன்று சாத்தியமில்லை.

கடுமையான வார்த்தைகள் மற்றும் செயல்கள் உங்கள் துணையின் மனதில் காயத்தை ஏற்படுத்தும். இதனால் உறவின் ஸ்திரத்தன்மை பாதிக்கும்.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். இது உங்களுக்கு கூடுதல் சுமையாக இருக்கும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. அஜாக்கிரதை மற்றும் கவனமின்மைகாரணமாகஉங்களுக்குவளர்ச்சி அளிக்கும் சில மதிப்பு மிக்க வாய்ப்புகளை இழப்பீர்கள்.

பணியிடத்தில் வெற்றிகள் அதிக அளவில் காணப்படாது. இதனால் பணிகள் தேங்கிக் கிடைக்கும். என்றாலும் திட்டமிட்டு பணியாற்றினால் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்கலாம்.

மனதில் உள்ள குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். அற்ப காரணங்களுக்காக உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள்.

இன்று வீணான செலவுகள் காணப்படும். உங்கள் செலவுகளை கட்டுபடுத்த இயலாது. சிக்கனம் கடைப்பிடிக்க வேண்டும்.




இன்று சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும். முக்கிய இலக்குகளை அடைய திட்டமிடலாம். நீங்கள் எதிர்பார்த்ததை விட இன்று அதிகம் கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

பணியிடத்தில் அதிக வாய்ப்புகள் காணப்படும். நீங்கள் பணிகளை திறமையாகவும் விரைவாகவும் ஆற்றுவீர்கள். உங்கள் அணுகுமுறையில் உறுதி காணப்படும்.

நீங்கள் உங்கள் துணையுடன் சிறந்த அமைதியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இன்றைய நாள் இனிமையாக சிறப்பாக இருக்கும்.

உங்களின் சேமிப்பு ஆற்றல் சிறந்த முறையில் அதிகரிக்கும். லாபம் தரும் புதிய முதலீடுகளில் நீங்கள் பங்கு பெறலாம்.

இன்று உங்களிடம் சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்று மகிழ்ச்சிகரமான நாளாக இருக்காது. பதட்டமான சூழ்நிலை கவலை அளிக்கும். நீங்கள் சில தடைகளை சந்திப்பீர்கள். அது உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். சிறந்த வளர்ச்சி காண திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் மேலதிகாரியுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். அதிகப் பணிகளால் மகிழ்ச்சி குறையும். உங்கள் பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

குடும்ப பிரச்சினை சிலவற்றின் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். கருத்துள்ள பேச்சு வார்த்தைகள் மூலம் இந்த வேறுபாட்டை சரி செய்யலாம்.

இன்று நிதிக் கட்டுப்பாடு காணப்படும். இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரும்.




ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශේෂ

I වැනි කොටස: (I) වැනි ඡේදය - සාමාන්‍ය

# 15 சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி விசேட வர்த்தமானி வெளியீடு

மின்சார விநியோகம் உள்ளிட்ட, 15 சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி ஜனாதிபதியினால் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, மின்சார விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகள், எரிபொருள், பெட்ரோலிய பொருள்கள், எரிவாயு விநியோகம், மருத்துவமனைகள், மருந்தகங்கள், பயணிகள் அல்லது சரக்கு போக்குவரத்து சேவைகள் என்பன அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், நீர் வழங்கல் சேவைகள், விமான நிலையங்கள், துறைமுகங்கள், ரயில் பாதைகள் அல்லது வான் வழி போக்குவரத்துச் சேவைகள், சுற்றுலாச் சேவைகள், உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் வழங்கல், பாதுகாப்பு மற்றும் விநியோகம் தொடர்பான சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அவசர நோயாளர் காவு வண்டி சேவைகள், இலங்கை மத்திய வங்கி உட்பட அனைத்து அரச வங்கி மற்றும் காப்புறுதி சேவைகள், தீயணைப்பு சேவைகள், தொலைபேசி, தொலைத்தொடர்பு, ஊடகம்தொடர்பானசேவைகள், தாழ்நிலங்களை மீட்டெடுப்பது, அபிவிருத்தி செய்தல் தொடர்பான சேவைகள், விவசாயம் மற்றும் விவசாய காப்புறுதி தொடர்பான சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.